2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சாலை மிக மோசமாக இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். 2006–லே அந்தச் சாலை போடப்பட்டது. அதற்குப் பின்பு எவ்வித பராமரிப்பும் இல்லாமல் இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து நிதிநிலைக்கு ஏற்ப அந்தச் சாலையைப் பராமரிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், திரு. எஸ்.எஸ். சிவசங்கர், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. மு. அருண் சுப்பிரமணியன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. ஆர். கணேஷ்குமார் மற்றும் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் ஆகியோருடைய தொகுதிகளில் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்ற அந்தக் கருத்து பதிவு செய்யப்படுகிறது.

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

நியாய விலைக் கடை

***460—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அம்மாப்பேட்டை கிராமத்திற்குப் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2012 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, நவலை கிராமத்தையொட்டியுள்ள அம்மாப்பேட்டை கிராமத்தில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க, அரசு ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில், இக்கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை துவக்க தற்பொழுது சாத்தியக் கூறுகள் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, மொரப்பூர் பகுதியில் இருக்கக்கூடிய அம்மாப்பேட்டை கிராமத்தில் மொத்தம் 124 குடும்ப அட்டைகள் உள்ளன. இவர்கள் தற்போது ரேஷன் பொருட்களைப் பெறுவதற்கு பக்கத்தில் இரண்டரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய அண்ணாமலைப்பட்டி கிராமத்திற்கு வரவேண்டியுள்ளது. அதே அம்மாப்பேட்டை கிராமத்திற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய கெட்டுப்பட்டி, புதூர் ஆகிய கிராமங்களில், கெட்டுப்பட்டியில் 60 குடும்ப அட்டைகளும், புதூரில் 20 குடும்ப அட்டைகளும் உள்ளன. இந்த 204 குடும்ப அட்டைகள்தான் அம்மாப்பேட்டைக்கு வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒரு கூட்டுறவுக் கடையில் இருக்கக்கூடிய குடும்ப அட்டைகள் மட்டுமல்லாமல், பக்கத்துக் கூட்டுறவுக் கடையில் இருக்கக்கூடிய 60 குடும்ப அட்டைகளையும், இன்னொரு கூட்டுறவுக் கடையில் இருக்கக்கூடிய 20 குடும்ப அட்டைகளை எடுத்தால், நிச்சயமாக 204 அட்டைகளை வைத்து ஒரு புதிய பகுதிநேரக் கடையை ஆரம்பிக்க முடியும். ஏற்கெனவே, தருமபுரியில், மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் தொகுதியில், சென்ற ஆட்சியிலே இப்படி மூன்று கடைகளிலிருந்து குடும்ப அட்டைகளை எடுத்து கடைகளை ஆரம்பித்து இருக்கின்றோம். அத்தகைய வழிவகைகளைச் செய்து, அம்மாப்பேட்டை கிராமத்தில் ஒரு புதிய பகுதிநேரக் கடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறக்க முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.*

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னகவுண்டம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் நடத்தப்படும், சின்னகவுண்டம்பட்டி தாய்க் கடையில் தற்போது 160 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருக்கின்ற அண்ணாமலைப்பட்டி பகுதி நேர அங்காடியில் 406 குடும்ப அட்டைகள் உள்ளன. ஒரு பகுதி நேர அங்காடியிலிருந்து இன்னொரு பகுதிநேர அங்காடியைப் பிரிக்க முடியாது என்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, ஏற்கெனவே பிரிக்கப்பட்டிருக்கின்ற கடையிலிருந்து இன்னொரு கடையைப் பிரிக்க முடியாது என்கின்ற நிலையில் இந்தக் கடையைப் பிரிப்பதற்கு இப்போது சாத்தியக் கூறுகள் இல்லை. இதனை ஒரு சிறப்புக் கூறாக மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எடுத்துச் சென்று, வாய்ப்புகள் இருப்பின், செய்து கொடுக்கப்படும் என்கிற தகவலை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அரூர் தொகுதியில் மட்டும், அதாவது, மலைத்தாங்கி, வேடம்பள்ளி, காவாப்பட்டி, எஸ். தாத்தம்பட்டி மற்றும் பொன்னேரிப்புதூர் ஆகிய கிராமங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், 5 பகுதிநேரக் கடைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. பல பகுதிநேரக் கடைகளில், குறிப்பாக இப்போது சொல்லியிருக்கக்கூடிய கடையில்கூட இரண்டு நாட்கள் மட்டும் 460 குடும்ப அட்டைகளுக்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன. அந்த மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் வந்து பொருட்களை வாங்கமுடியவில்லையென்றால், அவர்களுக்குக் கிடைக்காமலே போகின்றது. அம்மாப்பேட்டையிலே இருக்கக்கூடிய அந்த கிராமத்து மக்களில், 120 பேரில் 60 பேருக்கு மட்டுமே அரிசி,

மண்ணெண்ணெய் கிடைக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படி இருக்கக்கூடிய பகுதிநேரக் கடைகளில், இரண்டு நாட்களுக்கு விநியோகம் பண்ணக்கூடிய குக்கிராமங்களை அடையாளம்கண்டு, இந்திந்த கிராமங்களுக்கு இந்திந்த தேதிகளிலே உணவுப் பொருட்கள் வழங்கப்படும்; இந்திந்த கிராமத்து மக்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதைப்போன்ற அறிவிப்பை அல்லது அரசாணையை வெளியிடுகின்றபட்சத்தில், பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு உணவுப் பொருள் கிடைக்கும். நான் சொல்லக்கூடிய அம்மாப்பேட்டை கிராமத்தில் போயர் இனத்தைச் சார்ந்தவர்கள் வாழ்கிறார்கள்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, நான் பலமுறை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். கேள்விக்கு வாருங்கள். இப்போது நேரம் 10–50 ஆகின்றது. நான் 11–00 மணிக்குள் வினாக்கள்–விடைகளை முடித்துவிட்டு மற்ற அலுவல்களுக்குப் போவதா, அல்லது வினாக்கள்–விடைகள் நேரத்தையே இரண்டு மணி நேரத்திற்கு நீட்டித்துக் கொண்டிருக்க முடியுமா? நீங்களே சொல்லுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேரக் கடைகளிலே 2 நாட்களில், 300, 400 கார்டுகள் இருக்கக்கூடிய பகுதிகளிலே அவர்களால் விற்பனை செய்ய முடியவில்லை. அதனால், தரம் பிரித்து, குறிப்பிட்ட கிராம மக்கள் குறிப்பிட்ட நாட்களில் பொருட்களைப் பெறுகின்ற உத்தரவைப் பிறப்பித்தால் அனைவருக்கும் அந்தப் பொருட்கள் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும், அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, நீங்கள் மற்றவர்களுடைய உரிமைகளில் தலையிடுகிறீர்கள். மேலும் மூன்று, நான்கு உறுப்பினர்கள் வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள்; நீங்கள் சுருக்கமாகக் கேள்வி கேட்டால், அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க முடியும். நீங்களே அதிக நேரம் எடுத்துக்கொள்வதால், அவர்களுக்கான வாய்ப்பை நீங்கள்தான் பறிக்கின்றீர்கள். நான் பறிக்கவில்லை. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சின்னக்கவுண்டம்பட்டி தாய்க் கடையிலே 160 குடும்ப அட்டைகள் உள்ளன. 160 குடும்ப அட்டைகளுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய மூன்று நாட்களில் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. அதேபோல, அண்ணாமலைப்பட்டி கிராமத்தில் இருக்கக்கூடிய, 406 குடும்ப அட்டைகளுடன் உள்ள முதல் பகுதிநேரக் கடை செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்பட்டு வருகிறது என்பதையும், இதைப்போலத்தான் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பகுதிநேரக் கடைகளில் எந்தெந்த நாட்களில் விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அதன் அடிப்படையிலேதான் பொருட்கள் வழங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

115—

தூர் வாருதல்

***5755—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் அணையைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பவானிசாகர் அணையைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். பவானிசாகர் அணையின் முழுக் கொள்ளளவு 32.80 டி.எம்.சி. அடி ஆகும். இந்த அணை கட்டி முடிக்கப்பட்டு 56 வருடங்கள் ஆகின்றன. இந்த இடைவெளியில் அணையில் படிந்துள்ள சுமார் 3.15 டி.எம்.சி. அடி வண்டல் மண்ணை